முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 16 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனி திங்கள் 2 ம்நாள்)

இடைநிலை மனு எண்.2/2026
அசல் வழக்கு எண்.179/2022

பங்கஜம் .. மனுதாரர்/ வாதி

// எதிர் //

1. முத்தம்மாள்
2. ஆர்.சோமசுந்தரம்
3. பிரவீன்
4. நவீன்
5. பீ.சம்பூரணம்
6. எஸ்.ஜி.செங்கோட்டையன்
7. சி.பிரேமா
8. வி.தீபா
9. எம்.சரவணன்
10. எஸ்.கீதா
11. எஸ்.முருகேஸ்வரி
12. கே.கே.குமார்
13. எஸ்.அலாவுதீன் பாட்ஷா
14. சி.நிர்மலா
15. ஆர்.கோபாலகிருஷ்ணன்
16. கே.மல்லிகா
17. ஜி.ஜெகநாதன்
18. எம்.மல்லிகா .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

கடந்த 23.01.2026 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 8, விதி 9 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை ஏற்றுக் கொள்ளக் வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு 13.03.2026 ம்தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.ஏ.சீனிவாசன், வழக்கறிஞர் அவர்களும்,1 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

திரு.எஸ்.கே.மதன்குமார், வழக்கறிஞர் அவர்களும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.பி.சி.பழனிசாமி, வழக்கறிஞர் அவர்களும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.பி.கார்த்திகேயன், வழக்கறிஞர் அவர்களும்,5ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.பி,மாணிக்கம், வழக்கறிஞர் அவர்களும், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.டி.புவனேஸ்வர், வழக்கறிஞர் அவர்களும், 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.ஏ.பி.சி.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் அவர்களும்,17ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.எஸ்.ஆனந்தராஜ், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், 11 முதல் 16 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை ஏற்றுக் கொள்ளக் வேண்டுமென்று கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம்</u>:-

மனுதாரர் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/ வாதி பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். 5, 7 முதல் 12 மற்றும் 17ம் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பொய்யான சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது. இம்மனுதாரர் தரப்பில் அவை யாவும் உண்மையல்ல என்று மறுத்து பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதிலுரையை ஏற்றுக் கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்:</u>

இந்த மனு பொய்யானது, கற்பனையானது, சட்டப்படியும்

சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் யாதெனில், இவ்வழக்கு முதலில் பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் 1,2 எதிர்மனுதாரர்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.285/2013 ஆக ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்பொழுதே பதிலுரை தாக்கல் செய்யாமல் 12 வருடங்கள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்து பதிலுரையை ஏற்க கோருவது ஏற்கத்தக்கதல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது 5 முதல் 17 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு அவர்கள் 2019 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். அப்பொழுதும் பதிலுரை தாக்கல் செய்யப்படவில்லை. வாதி வா.சா.1 ஆக 24.06.2019 ம் தேதியில் முதல் விசாரணை செய்யப்பட்டதில் குறுக்கு விசாரணைக்காக 26.02.2020 மற்றும் 30.11.2020 ஆகிய தேதிகளில் வாய்தா கொடுக்கப்பட்டும் வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜரில்லை என்பதால் வாதியின் சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டது. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது சில சொத்துக்கள் சேர்க்கப்படாமல் விடுப்பட்டு போய்விட்டதாக கூறி மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.3/2021 தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டதில் ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க பணவரம்பு இல்லை என்பதால் இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாறுதல் ஆனதில் அ.வ.எண்.179/2022 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் 2013 முதல் 2026 வரை பதிலுரை தாக்கல் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்கை நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், விடுபட்ட போன சங்கதிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு புதிய சங்கதிகளை கொண்டு பதிலுரை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட பிறகு மேற்படி பதிலுரை தாக்கல் செய்ய இயலாது. இம்மனு அனுமதிக்கும் பட்சத்தில் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தும். மனுதாரர் அவரது வழக்கை விரிவுபடுத்தும் எண்ணத்தில் பதிலுரையை தாக்கல் செய்துள்ளார். மனுவில் தகுதிபாடு இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.,

4. 5 ம் எதிர்மனுதாரர் தரப்பிலும், 7 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் 'அதிக செலவு தொகையின்பேரில் இம்மனுவை அனுமதிக்கலாம்' என்று மனுவின் மேல் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 1, 3, 4, 6 மற்றும் 17 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும் தோன்றா தரப்பினர்களாக கருத்தப்பட்டு அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

6. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் 5, 7 முதல் 12 மற்றும் 17 ம் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பொய்யான சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளதாகவும், இம்மனுதாரர் தரப்பில் அவை யாவும் உண்மையல்ல என்று மறுத்து பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதிலுரையை ஏற்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

7. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கு முதலில் பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.285/2013 ஆக ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அப்பொழுதே பதிலுரை தாக்கல் செய்யாமல் 12 வருடங்கள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்து பதிலுரையை ஏற்க கோருவது ஏற்கத்தக்கதல்ல என்றும், பல இடைநிலை மனுக்கள் காரணமாக ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க பணவரம்பு இல்லை என்பதால் இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாறுதல் ஆனதில் அ.வ.எண்.179/2022 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டதாகவும், மனுதாரர் தரப்பில் 2013 முதல் 2026 வரை பதிலுரை தாக்கல் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், வழக்கை நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், விடுபட்ட போன சங்கதிகளை நிவர்த்தி

செய்யும் பொருட்டு புதிய சங்கதிகளை கொண்டு பதிலுரை தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

8. இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதிலுரையை பரிசீலனை செய்கையில், அதில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை சங்கதிகளை மறுத்தும், தாவா சொத்தின் தன்மை மற்றும் தரப்பினர்களின் பங்குரிமை குறித்தும் சொல்லப்பட்டுள்ளது. பதிலுரை காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டு இருப்பினும் வழக்கின் சங்கதிகள் முழுமையாக முன்னிடும் பட்சத்தில் தான் வழக்கில் இறுதியான தீர்வு காண இயலும். எனவே காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்திருப்பினும், வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**இறுதியாக**, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 16 ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.16 19:42:53 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

ஈரோடு

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.16 19:42:57 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.2/2026
அ.வ..எண்.179/2022
நாள் 16.03.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.